# சித்தர் பாடல்களில் மருத்துவ அறிவியல் நுணுக்கங்கள்

**பொன்.மாணிக்கவல்லி , முனைவர் பட்ட ஆய்வாளர் ,**
**அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை ,**
**தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

61

**ஆய்வுச் சுருக்கம்**

'உடம்பார் அழியின் உயிராய் அழிவர்' என்ற பாடல் வரிகளை தந்தவர் சித்தர் திருமூலர். இவரின் யோக மருத்துவத்தை முன்வைத்து 'சித்தர் பாடல்களில் மருத்துவ அறிவியல் நுணுக்கங்கள்' எனும் தலைப்பில் பிராணயத்தின் முக்கியத்துவத்தை சித்தர்கள் எவ்வாறு கையாண்டுள்ளனர் என்பதை பாடல்கள் கொண்டு நுணுக்கமாக ஆய்வு செய்வதாக இந்த ஆய்வு கட்டுரை புலப்படுத்துகின்றது.

**திறவுச் சொற்கள்**

சித்தர்களின் மருத்துவத்தில் அடிப்படை முக்கிய கோட்பாடுகள், இறை பூசை, மச்சமுனி மருத்துவம், சிவவாக்கிய சித்தரின் மருத்துவம், திருமூலரின் உயிர் வழி மருத்துவம், திலோத்தமை சான்றுரைத்தல், கருவூரார் சித்தரின் மருத்துவ கருத்து,

**முன்னுரை**

உலக உயிர்கள் இன்புற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள். அவர்கள் எந்த ஒரு வசதியும், கருவியும் இல்லாத காலத்தில் இறை தத்துவம், மருத்துவம், வான சாத்திரம், மனதின் ஆற்றல்கள், தாவரங்களில் உள்ள மருத்துவ முறைகள், விலங்குகளின் தன்மைகள், பிரபஞ்சங்களின் தத்துவங்கள் போன்ற எண்ணற்ற செய்திகளில் நுணுக்கங்களை எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்யுள் வடிவில் அருளியுள்ளார்கள். நுணுக்கமான மருத்துவ செய்திகளை சித்தர்கள் பாடல்களில் மருத்துவ அறிவியல் நுணுக்கங்கள் என்ற தலைப்பில் தொகுத்து காண்பதே இக்கட்டுரையின் சிறப்பு.

சித்தர்களின் சூட் சுமத்தைப்பற்றி அறிந்து கொள்வதற்கு முன் சித்தன் என்றால் யார் என்ற பொருளுக்கு விளக்கம் தெரிந்து கொண்டால் எளிமையாக பயணிக்க இயலும்.

"நண்ணிய ஞாணத்தின் ஞானதி நுண்ணுவோன்
புண்ணிய பாவம் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயம் கரைஞானம் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவ முத்தன் சித்தனே. "

- திருமந்திரம் 1475

பெற்ற ஞானத்தின் ஞானதி நான்கு கையுற பெற்றவன் சரியை கிரியை யோகம் ஞானம் புண்ணியத்தால் அடையும் நற்பயணையும் பாவத்தால் வரும் தீய பயனையும் கடந்து நிற்பவன் இருவினை ஒப்பு உள்ளவன் பெருமையான சிவஞான வரம்பைக் கண்டவன் மல குற்றங்கள் மாயை கன்மம் ஆணவம் அற்றவனும் அறிவின் எல்லையை கண்டவனும் சிவ முத்தனை பேற்றை

அடைந்தவனுமே சித்தன் என திருமூலர் சான்றுரைக்கிறார் மேற்கண்ட தகுதிகள் இருந்தால் நுண்ணறிவுகளை உணர்த்து கொள்ள இயலும் என்பதனை,

“நுண்ணறி வாகும் நுழைப்புலன் மாந்தர்க்குப்
பின்னறி வாழும் பிரான் அறிவு அத்தடம்
செந்நெறியாகும் சிவகதி சேர்வார்க்குத்
நன்னெறி யாவது சன்மார்க்கம் ஆகும்”

- திருமந்திரம் 10:1228

மிகக் கூரிய புலன்களைக் கொண்டு அறியும் மாந்தரின் அறிவு பின் அறிவாகும் கருவிகளை விட்டும் பிராணனுடன் ஒன்றி கருவிகள் இல்லாது அறியும் அறிவைப் பெறுவது செந்நெறியாகும் சிவத்துடன் பொருந்திய அடையப்படுவதே ஆன்மா அடைய வேண்டிய நெறியாகும் இதுவே சன்மார்க்கமாகும்.

ஆன்மா எதனை சார்ந்து நின்று அருகிறதோ அதனையே அறியும் இயல்பு உடையது பதி ஞானம், பசு ஞானம், பாச ஞானம் என்ற மூன்றில் சித்தர்கள் கையாண்டு பதிஞானம் ஆகையால் சித்தர்களால் எல்லா கலைகளையும் எல்லா காலங்களுக்கும் பொருத்துமாறு படைத்துள்ளார்கள்.

**சித்தர்களின் மருத்துவத்தில் அடிப்படை முக்கிய கோட்பாடுகள்**

இது, முழுக்க முழுக்க சைவ அறிவியலின் பாற்பட்டது. ஒருவன் எந்த நாட்டில், எந்த தட்பவெட்ப நிலையில் பிறந்திருக்கிறானோ அதற்கேற்ப உணவையே உண்ண வேண்டும். அந்த சூழலுக்கு ஏற்ற நோய்களே அவனுக்கு வரும். அவற்றை தீர்க்க, அந்த நாட்டு பச்சிலை மூலிகைகளையே பயன்படுத்த வேண்டும் என்பதே இந்த அறிவியல்.

இறைவனை உணர்ந்து, அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, அருளை அடைந்து அதன் மூலம் அகம் புறப்பொருட்களை ஊடுருவி அறிந்து, அவற்றின் குண நலன்களை ஆய்ந்து உருவாக்கியதாகும்.

சித்த மருந்து அறிவியல் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் ஆகிய நான்கு வகை கோட்பாடுகளை கொண்டதாகும். இவர்கள் கண்ட அறிவியல் மருத்துவம், 96 தத்துவங்களில் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு சித்தரும் சிறப்பான மருத்துவர்கள் ஆக இருந்து கொண்டு ஒவ்வொரு காலத்திற்கு ஏற்றார் போல் செய்திகளை தந்துள்ளார்கள். இம்மருத்து முறைகளை ஆராயும் போது முக்காலத்திற்கும் பொருத்தமாக உள்ளது என்பதை அறிய முடிகிறது.

**இறை பூசை**

சித்தர்கள் அனைவரும் பூசை செய்தல் மற்றும் தவத்தாலும் வரம் பெற்றே பிறகுதான் எந்த செயலையும் செய்வது அவர்களின் சிறப்பு இன்றைய வரை மரபு தொடர்ந்து வருவது வழக்கத்தில் உள்ளது. சிவனின் முதல் சீடராக நந்தி சுவர் சித்தர் முருகப்பெருமானின் பேரருளை பெற்றவர். வரங்கள் பெறும் ரகசியத்தை விளக்குகிறார்.

“செய்யப்பா விக்கினர் தம் பூசை சொன்னேன்
செயமான சண்முவன் பூசை கேளு
வையப்பா சங், வங்,மங் சரவணாய
வளமாக அனாகதத்தில் பூசை பண்ணு

வையப்பா புட்ப பரிமளங்கள் கொண்டு

மைந்தனே துபஞை வேத்யங் காட்டி

கையப்பா கனக சபை யதிலே பூசக்

கண்மணியே சண்முகத்தை வரங்கள் கேளே”

சங்,வங்,மங் என்ற விதை எழுத்துக்கள் பீஜாட் சரங்கள் என்று கூறப்படும் சக்தி மிக்க எழுத்துக்களை நெஞ்சு குழியில் வைத்து பூசைக்கு தேவையானவற்றை வைத்து தூபம் காட்டி முறைப்படி பூசையது வரம் பெறும் உத்தியை கூறியுள்ளார்.

இதில் அறிவியல் செய்திகள் எத்தனை நுணுக்கங்கள். பூசையால் உடலுக்கு தேவையான சக்தி கிடைக்கிறது. மனம் ஒருநிலைப்படுகிறது. ஒரு மருத்துவன் நோயாளிகளை நன்கு கவனித்து நோய்களை என்னவென்று முடிவு செய்த பின் அதற்கான மருந்தை தயார் செய்து முழுமையாக குணப்படுத்த வேண்டும் என்றால், மருத்துவர் முதலில் உடல் மனம் நலமாக இருப்பதைபார்த்து கொள்ள வேண்டும். என்ற அடிப்படையே பதிவு செய்துள்ளார்.

**மச்சமுனி மருத்துவம்**

போகரின் சீடரான மச்சமுனி, சித்த மருத்துவங்களை தயாரிக்கும் முறையை பற்றி விரிவாக கூறியுள்ளார்.நாடி பார்த்து, வியாதிகளை அறிந்து , மருந்துகளை கொடுக்க சொல்கிறார், இந்த மருத்துவ சித்தர்

“கைதனைப் பிடித்து நீயும்

கடவுளைப் பார்த்து எண்ணி

உய்யதோ அல்லவென்று

உத்தரி நாடி பார்க்க

பையவே தொடரும் தொட்டும்

பகைப்பது கண்ட போதே

மெய்தனில் குணங்கள் கண்டு

மேவியே விரும்பிட்டாயே”

என்றுரைக்கிறார்.

**சிவவாக்கிய சித்தரின் மருத்துவம்**

இவர் இளமைக்கு மருந்து மூச்சு என பாடியுள்ளார். யாருக்குத்தான் வேண்டாம் இளமை எவர் விரும்புகிறார்கள் முதுமையை எத்தனை எத்தனை மருந்துகள் மாத்திரைகள் இதர மருத்துவ முறைகளும் திணறி நிற்கும் இத்துறையில், மிக எளிய மூச்சு பயிற்சி ஒன்றின் மூலம், என்றும் இளமை, என்ற ரகசியத்தை வெளியிட்டுருக்கிறார்.

“உருத்தரிந்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்

கருத்தினாலிருத்தியே கபாலமேற்ற வல்லீரேல்

விருந்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்

அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே”

- சிவவாக்கியர் - 5

சரியான முறையில் மூச்சை கபாலத்தில் ஏற்றினால் இளமை மேலிடும் மேனியும் சிவந்திடும். அதாவது இரத்த சிவப்பணுக்கள் அதிகரிக்கும்.

"தேடி வந்த காலனும் திலகத்திருந்து போய்விடும்"

- சிவவாக்கியர் - 157

என கூறியுள்ளார்.

உடலில் தேவையான உயிர் வலி காற்று நிறைந்து விட்டால் நோய்கள் கூட திலகத்து ஓடிவிடும் என்பதை பதிவு செய்துள்ளார்.

**திருமூலரின் உயிர்வழி மருத்துவம்**

சிவவாக்கியருக்கு மட்டுமல்ல எல்லா சித்தர்களுக்கும் தொன்மையானவர் திருமூலர் பல பாடல்களில் பிரணாயத்தின் அதாவது, உயிர் வழிக் காற்றைப் பற்றி சிறப்பான செயல்களை தந்துள்ளார். பிராணன் ஆக்சிஜன் என்ற பொருளில் பயன்படுத்தும் போது உலக மக்களுக்கு எளிமையாக புரிந்து விடும். இதற்கான பயிற்சிகள் அதிகமாக நடத்தப்பட்டு வருகிறது. ஆனாலும் ஒவ்வொரு அமைப்புகளும் ஒவ்வொரு விதமாக கட்டமைத்துள்ளதால் இதில் நிறைவு என்பது குறைவுதான். ஆகையால் சித்தர்களின் படைப்பு மாற்றாமல் அப்படியே புரிந்து கொண்டு பயிற்சிகளை மேற்கொள்ளும் நிலையில் முழுமையாக பயன்படுகிறது.

"ஏற்றி இறக்கி இருகளாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வார் இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வானர்க்குக்
ஊற்றை உதைக்கும் குறியது வாமே.

- திருமந்திரம் 571

இடைகலை (இடது) பிங்கலை (வலது) வழியாக இழுத்து பூரித்து காற்றை உள்ளே குப்பகம் செய்யும் முறையை தெரிந்தவர் இல்லை. அவ்வாறு காற்றை குப்பகம் செய்யும் முறையை தெரிந்தவர்கள் காலனை கடக்கும் இலட்சியத்தை உடையவர்.

அட்டாங்க யோகம் என்ற பகுதியில் நான்காவது வரிசையில் பிராணயத்தில் காற்றே காலனுக்கு மருந்து என குறிப்பிடுகிறார். மூச்சு என்பது எல்லா உயிர்களுக்கும் முதல் மருந்தல்லவா ஆகையால் செய்முறையும் அதன் சிறப்பையும் தந்துள்ளார்.

"ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் குபம்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பதும் இரண்டது ரேசகம்"

- திருமந்திரம் 568

என்ற பாடலில் காற்றை இழுத்து பூரகம் கும்பகம் ரேசகம் செய்யும் நுணுக்கத்தையும் அதன் கால அளவை கணக்கிட்டு 16:64:32 என்ற கணக்கியலை கூட்டி காட்டுகிறார். இவ்வாறு செய்யும் சாதவருக்கு.

“வளியினை வாங்கி வயத்தில் அடைக்கல்

பனிங் கொத்துக் காயம் பழுங்கினும் பீஞ்சாம்

- திருமந்திரம் 569

அதாவது காற்றை இழுத்து தன் பயப்படுத்தி அடக்கி இருந்தால், உடம்பு பலுங்கு போன்று மாசின்றி தூயத்தாய் அது முதுமை எய்தினும் இளமை தன்மை உண்டாக்கும். இளமை தன்மை இருந்தால் மட்டுமே எந்த செயலையும் கடினமில்லாமல் செய்ய இயலும் என்பதால் சித்தர்கள் இளமைக்கும், உடல் மனம் நலமாக வைத்துக் கொள்ளும் வைத்திய முறைகளை கையாளுகிறார்கள்.

மூச்சுப் பயிற்சியை முறைப்படுத்தி விட்டால், ரத்த சோகை, முடி உதிர்தல். இளநரை போன்ற குறைகளை எளிதில் குணமாக்க இயலும் எனவும் சில பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

**திலோத்தமை சான்றுரைத்தல்**

சித்தர்களின் சாஸ்திரங்கள் அனைத்தும் உண்மையான உணர்ந்து திருமூலரை குருவாக ஏற்றுக்கொண்டு பயிற்சி பெற்று பேரின்பம் பெற்றதை,

“முப்பத்துரண்டு தரம் ரேசிக்கவே

அற்பம் என்று மனதில் எண்ணாமல்

அழுத்திப் பார்க்க அமுதம் பொழியும்

- திலோத்தமை 1

அண்டம் பிண்டம் இரண்டையுமே சமமாய் ஆக்கி

கண்டு கொண்ட சாஸ்திரத்தின் நுட்பம் தன்னை

கருத்து உடனே கண்டறிந்து திருமூலர் தம்மை

தொண்டு செய்து இதை அறிந்து வந்தேன ப்பா

தொகுப்பாக சாஸ்திர தன்மை பாரே

- திலோத்தமை 13

என்று திலோத்தமை திருமூலர் சித்தரை போற்றி சான்றுரைக்கிறார்.

**கருவூரார் சித்தரின் மருத்துவக் கருத்து**

சோழமண்டலத்தில் மாமன்னன் இராசராச சோழனின் புகழ்பெற்ற குரு கருவூரர். இவரின் பாடல்கள் பல உண்டு அதில்,

“தம்பரமே திகம்பரமாய் பிராணாயாம் பண்ணச்

சமத்தி இவள் மதிக் கண்ணால் ஒளியைப் பாரே

- கருவூரார் 3

பிரணாயம் பயிற்சி செய்யும் போது சக்தி கிடைக்கும் என்பது உறுதி அதை தான் சித்தர்கள் பெண் தெய்வமான வாழைக்குமதியை சமத்தியின் அருளால் ஞான ஒளியை கிடைக்கும் என்ற நுட்பத்தை கூறுகிறார்கள்.

பயிற்சியோடு மட்டுமல்லாது கருநெல்லி உண்டு வந்தால் இளமையோடு இருக்க இயலும் என்ற செய்தியையும்

1. இழம் இழம்மையாம் மறுத்து கிட்ட இருக்க
2. வளம் இளமைக்காவேன் அலையிர் பழ மலையில்
3. வெற்றி விழி அருகே வெண்சாரை ஒற்று உண்டு
4. உற்ற கருநெல்லி எங்கே உண்டு

– கருவூரர் (17)

என்ற பாடலில் நெல்லிக்கனியாகும் இத்தையும் சுட்டிக்காட்டி உள்ளார்.

**முடிவுரை**

சித்தர்களின் பாடல்கள் முழுவதும் உலகம் உயிர் உடல் ஆன்மா இதை மட்டுமே உணர்ந்து சூட்சுவாக அருளப்பட்டது என்பதை ஆய்வில் அறிய முடிகிறது நவீன மருத்துவமும் உடலும் உயிரையும் பாதுகாக்கவே கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்து மக்கள் நலனின் அக்கறை கொள்கிறது.

“வான்வளி அனல் நீர் மண் மருந்து அன்னம்
ஆன ஆறு ஐங்கோசத்தொகுதி
யாக்கை பகுதியது ஒருபுடை
சித்தாந்த அட்டகம்”

- திருமந்திரம் 15

வின் வாயு நெருப்பு நீர் மண் மருந்து உணவுகள் ஆகிய இவற்றால் ஏற்பட்ட தாதுக்கள் அன்மையம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும் ஐந்து கோஷங்கள் இவைகள் எல்லாம் கூடியிருக்கும் உடலில் பகுதிய இருக்கும் என்ற பொருளில் அண்டத்தில் உள்ளதை எல்லாம் பிண்டத்தில் உள்ளது என்பதை தெள்ளத் தெளிவாக காண முடிகிறது ஆகையால் நன்னெறியில் சென்று அறத்தோடும் ஞானத்தோடும் வாழ்வதே மனித பிறவியின் நோக்கம் என சித்தர்கள் வழிகாட்டியாகவும் மருத்துவ நுணுக்கங்களையும் கடலளவு பதிவு செய்துள்ளார்கள் எனவே அதை முறையாகப் பெற்று பேரின்பம் பெறுவோம்.

**துணையனூர் பட்டியல்**

திருமந்திரம் - வர்த்தமான பதிப்பகம்.
சென்னை 7 தெளி ஆசிரியர் எம் நாராயண

சித்தர் உலக ரகசியங்கள் - ஸ்ரீ அன்னை மீனாட்சி பப்ளிகேஷன்
சென்னை 7

சித்தர்கள் பாட்டு ஒன்று - ஆசி நாராயணமூர்த்தி
கோயம்புத்தூர் 6

சித்தாந்த அட்டகம் - திருவாடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், திருவிடைமருதூர் பதிப்பகம், ஸ்ரீ நமச்சிவாயா மூர்த்தி அச்சகம், திருவாடுதுறை.

**இணைய முகவரி**

dinamani.com

https:// www.dinnamani.com>apr

telibrary.com.

https://telibrary.com>uploads

ta.m.wikipedia.org

https://ta.m.wikipedia.org >wiki: